# தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்

## சைதாபேட்டை, சென்னை – 600 015.

### மாணவர்களுக்கான தேர்வு விதிமுறைகள் - ஜனவரி 2015

**ஜனவரி 2015** ஆண்டுத் தேர்விற்கான தேர்வு விண்ணப்பம் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள தேர்வு கட்டணங்களின் படி பொதுவான வங்கிச் சலான் (core banking challan) வரைவோலை (demand draft) வாயிலாக செலுத்தி தேர்வு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அனுப்புமாறு கோரப்படுகின்றீர்கள்.

1. இரண்டாம் ஆண்டு / மூன்றாம் ஆண்டு மற்றும் பருவம் (Semester) ஆகியவற்றிற்குரிய மறுபதிவு (Re-registration fees) கல்விக் கட்டணங்களை செலுத்தாதவர்கள் அதற்குரிய கட்டணங்களை உடனடியாக தேர்வுக்கட்டணம் செலுத்துவதற்கு முன்பாக செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாதவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் கல்விக்கட்டணம் செலுத்தாமல், தேர்வுக்கட்டணம் மட்டும் செலுத்தினால் தேர்வு நுழைவுச்சீட்டு (Hall-Ticket) அனுப்பப்படமாட்டாது.
2. தேர்வுக் கட்டணம், மதிப்பெண் சான்றிதழ் கட்டணம், தற்காலிகச் சான்றிதழ் கட்டணத்தினை ஸ்டேட்பேங்க் ஆப் **இந்தியா–வின் பொதுவான வங்கி சலான் (Core Banking Chellan) A/C No. 30843228843-ல் மற்றும் இந்தியன் வங்கி சலான் (Core Banking Chellan) A/C No. 6051265828 செலுத்தவும். அல்லது வரைவோலை (D.D.) வாயிலாக செலுத்தவும்.** ஒரு முறை செலுத்திய தொகையை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரவோ அல்லது மற்ற தேர்வுகளுக்கு மாற்றம் செய்யவோ இயலாது.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பொதுவான வங்கி சலான் (Chellan-TNOU Copy) இணைத்து **தேர்வு நெறியாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 577 அண்ணாசாலை, சைதாபேட்டை, சென்னை – 600 015** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.
4. **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 21.12.2014. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தாமதக்கட்டணம் ரூபாய் 50/- உடன் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26.12.2014.**
5. தாமதக் கட்டணத்துடன் வரும் விண்ணப்பங்கள் மாணவர்களின் சொந்த பொறுப்பிற்குட்பட்டு (Students' own risk) தேர்வாணையர் அலுவலகத்தில் பெறப்படும்.
6. மாணவர்கள் தங்களின் தேர்வு (எழுத்து மற்றும் செய்முறை) நுழைவுச்சீட்டுகளை, இணையதளம் (www.tnou.ac.in மற்றும் www.schools9.com) வாயிலாக பெறலாம். மேலும் அவரவர் கல்வி மையத்திலும், தேர்வு நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்னதாகப் பெற்றுக் கொள்ளலாம்.
7. **முதன் முறையாக தேர்வு எழுதும் மாணவர்கள் அந்த ஆண்டிற்குரிய / பருவத்திற்குரிய அனைத்து பாடங்களுக்கும் தேர்வுக் கட்டணம் முழுவதையும் செலுத்த வேண்டும்.**
8. பொதுவான வங்கி சலானில் **மாணவர்கள் தங்கள் பெயரையும் பதிவு எண்ணையும் பெரிய எழுத்துக்களில் (Capital Letters) எழுதி அனுப்பவும். தேர்வுக் கட்டணத்தைத் தனியாகச் செலுத்தவும். கல்விக் கட்டணத்தோடு (Tuition Fees) சேர்த்து செலுத்தக் கூடாது.**
9. மாணவர்கள் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வு மற்றும் திட்ட ஆய்வேடு ஆகியவற்றிற்கு கண்டிப்பாக தேர்வு கட்டணம் செலுத்த வேண்டும்.
10. ஒவ்வொரு தேர்வு விண்ணப்பத்துடன் **பொதுவான வங்கி சலானை / D.D.** தனியே அனுப்பப்படவேண்டும்.
11. **தேர்வுக் கட்டண விவரங்கள்** :

| Sl. No | Particulars of Fee | Name of the Programme | | | |
|---|---|---|---|---|---|
| | | U.G./ Certificate / Diploma (Rs) | PG / PG Diploma (Rs) | MBA, MCA, M.Sc. Counselling. / PG. Diploma in Counselling (Rs) | MBA Hosp. Admn / Ship. & Log. (Rs) |
| 1. | Each written paper | 60 | 125 | 200 | 300 |
| 2. | Per Practical Exam | 110 | 150 | 200 | ------ |
| 3. | Submission of Project / Dissertation | 100 | 400 | 500 | 750 |
| 4. | Cost of Application | 20 | 20 | 20 | 20 |
| 5. | Mark Statement | 50 | 50 | 50 | 50 |
| 6. | Provisional Certificate | 100 | 100 | 100 | 100 |
| 7. | Centre Fee | 100 | 100 | 100 | 100 |
| 8. | Late Fee | 50 | 50 | 50 | 50 |

12. மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்புதல் கூடாது.
13. பட்டய, முதுநிலை பட்டய, இளங்கலை / முதுகலை இறுதி ஆண்டு மாணவர்கள், தேர்வுக் கட்டணத்துடன் தற்காலிகச்

சான்றுக்குரிய கட்டணத்தையும் கண்டிப்பாக செலுத்த வேண்டும்.

14. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்ட அடையாள அட்டையை (Identidy Card) தேர்வெழுதும் சமயத்தில் காண்பிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

15. **பல்கலைக் கழகத்திற்கு அனுப்பும் தேர்வு விண்ணப்பம் மற்றும் வங்கி சலானின் ஒளிப்பட நகலினை (Xerox copy) வைத்துக் கொள்ளுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

16. தேர்வுகள், மதிப்பெண் பட்டியல். மறுமதிப்பீடு / மறுகூட்டல், தற்காலிகச் சான்றிதழ் ஆகியவைத் தொடர்பான தெளிவுரைகளுக்கு தேர்வுக் கட்டுப்பாட்டாளர் அவர்களுக்கு கடிதம் எழுதும்படி அறிவுறுத்தப்படுகிறது. மாணவர்கள் எழுதும் கடிதங்களில் முழுமையான பெயர், முகவரி மற்றும் பதிவு எண் ஆகிய விவரத்துடன் **தொலைபேசி எண்ணையும்** குறிப்பிடவும்.

17. **பாடப்பயிற்சித் தாள்கள்**: மாணவர்கள் அனைவரும் தங்களின் பாடப்பயிற்சித்தாள்களை அவரவர் கல்வி மையங்களில் (LRC) தேர்வுகள் தொடங்குவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். பாடப்பயிற்சித் தாள்களின் விவரத்தினை www.tnou.ac.in என்ற இணையதளத்தில் காணலாம்.

18. மாணவர்கள் தங்கள் பாடப்பிரிவு தொடர்பான திட்ட அறிக்கையை (project) தேர்வுகள் தொடங்குவதற்கு முன்பு பல்கலைகழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

19. தேர்வு மையத்தின் முகவரி, தேர்வு நுழைவுச் சீட்டில் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்படும். மாணவர்கள் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் www.tnou.ac.in மற்றும் www.schools9.com வாயிலாக, நுழைவுச்சீட்டின் பிரதியினை எடுத்துக் கொள்ளலாம். மேலும் தேர்வுமைய விபரங்கள், தேர்வுக்கு முன்னதாக செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்படும்.

20. கீழ்க்குறிப்பிட்டுள்ள தேர்வு மையங்களில் ஏதேனும் ஒரு தேர்வு மையத்தை மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தேர்வு மையத்தை தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டு அனுப்பிய பின்னர், எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு மையம் மாற்றம் செய்ய இயலாது. **தவிர்க்க இயலாத நேர்வுகளில் அல்லது குறைந்தபட்ச மாணவர்களின் எண்ணிக்கை இல்லாத நேர்வுகளில் அந்தக் குறிப்பிட்ட தேர்வு மையத்தினை ரத்து செய்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.** அச்சமயத்தில் ரத்து செய்யப்படும் தேர்வு மையத்தின் அருகாமையில் உள்ள வேறு தேர்வு மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவீர்கள்.

21. **தேர்வு மையங்களின் பெயர் பட்டியல்**

| | | |
|---|---|---|
| **வட சென்னை** | **நாகர்கோவில்** | **திருவாரூர்** |
| **மத்திய சென்னை** | **திருநெல்வேலி** | **திருச்சி** |
| **தென் சென்னை** | **மதுரை** | **தூத்துக்குடி** |
| **ஆவடி** | **நாகப்பட்டிணம்** | **வேலூர்** |
| **செங்கல்பட்டு** | **நாமக்கல்** | **விழுப்புரம்** |
| **திருவள்ளூர்** | **உதகமண்டலம்** | **விருதுநகர்** |
| **காஞ்சீபுரம்** | **பெரம்பலூர்** | **புதுச்சேரி** |
| **கோயம்புத்தூர்** | **புதுக்கோட்டை** | **சத்தியமங்கலம்** |
| **திருப்பூர்** | **இராமநாதபுரம்** | **பொள்ளாச்சி** |
| **கடலூர்** | **சேலம்** | **கோவில்பட்டி** |
| **ஒசூர்** | **தஞ்சாவூர்** | **கும்பகோணம்** |
| **தர்மபுரி** | **தேனி** | **ஈரோடு** |
| **திண்டுக்கல்** | **திருவண்ணாமலை** | **கரூர்** |
| **அரசூர்** | **மயிலாடுதுறை** | **பொன்னேரி** |

22. மாணவர்கள் வருடாந்திரப் படிப்பு முடியும் முன்னர் அதற்கான தேர்வினை எழுதக் கூடாது. தவறி எழுதினால் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட மாட்டாது. **அப்படி தேர்வு எழுதும் பட்சத்தில், பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது.**

23. செய்முறைத் தேர்விற்கான தேதி பின்னர் தமிழ்நாடு திறந்தப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் வாயிலாக தெரிவிக்கப்படும்.

24. நுழைவுச்சீட்டில் பாடம், தேர்வுமையம், சேர்க்கை எண் சம்பந்தமாக குறைகள் இருப்பின் உடனடியாக தேர்வுப்பிரிவினை தொடர்பு கொள்ளவும். (தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் – 044–24306661 / 24306662)

25. தேர்வு முடிவுகள் வெளியீட்டிலோ, மதிப்பெண் சான்றிதழ்களிலோ குறைகள் இருப்பின் 6 மாதத்திற்குள் தேர்வுப்பிரிவினை தொடர்பு கொள்ளவும். 6 மாதத்திற்கு பிறகு இது சம்பந்தமாக பெறப்படும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ள இயலாது.

26. தேர்வுமையத்திற்குள் எக்காரணத்தை முன்னிட்டும் கை தொலைபேசி (Mobile Phone) அனுமதிக்கபடமாட்டாது.

27. மேற்குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் மாற்றவோ, நீக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உள்ளது. தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களுக்கும் இது பொருந்தும்.

28. All PG, Diploma & Certificate பாடங்கள் அனைத்தும் தெடர்ச்சியாக 24.01.2015 முதல் நடைபெறும்.

**பேராசிரியர். எஸ். விஜயன்**
**தேர்வுக் நெறியாளர் (பொ)**

நாள்: 15.10.2015